நாள் 05.06.2025

எஸ்.டி.சி. 1799/2017

எ.சா. 2

பெயர் : சிவகிரீஷ்

த/பெ.சோமசுந்தரம்

வயது - 25

(புகார்தாரர் மற்றும் எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்)

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. வழக்கின் எதிரி என்னுடைய தந்தை என்றால் சரிதான். என் அம்மாவின் பெயர் குகப்பிரியா. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் ஆனைமலை ஈஸவரன் கோவிலில் அர்ச்சகராக வேலை பார்த்து வருகிறேன். கோவிலில் எனக்கு எத்தனை மணி முதல் எத்தனை மணி வரை வேலை என்றால் காலை 07.30 மணி முதல் மதியம் 12.30 மணிவரை மற்றும் மாலை 05.30 மணி முதல் இரவு 08.30 மணி வரை ஆகும்.

2. என்னுடைய அப்பா கடை வைத்துள்ளாரா என்றால் 2015 ம் ஆண்டில் துணிக்கடை வைத்திருந்தார். என்னுடைய அம்மாவிற்கு புற்று நோய் இருந்ததால் அதனை மூடிவிட்டார். ஆனைமலையில் அந்த கடை இருந்தது. எனது அப்பா தினமும் எங்கு வெளியே செல்கிறார் என்றும் அவரது வரவு செலவுகள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. என்னுடைய அப்பா வெளி வேலைக்கு செல்லும்போது தனியாக செல்வார் என்றால் சரிதான்.

3. புகார்தாரரிடம் இருந்து என்னுடைய தந்தை கடன் வாங்கினார் என்றால் சரியல்ல, நானும் என்னுடைய அம்மாவும் புகார்தாரரிடம் இருந்து கடன் வாங்கினோம். அந்த நேரத்தில் என் அப்பா எங்களுடன் வரவில்லை என்றால் சரிதான். என்னுடைய முதல் சாட்சியத்தில் என்னுடைய அம்மா கடன் வாங்கினார் என்ற விபரதை நான் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான்.

4. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள பிராமிசரி நோட் மற்றும் வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடைய தந்தையுடையது என்றால் சரிதான். என்னுடைய அம்மா கடனுறுதி சீட்டு எதுவும் புகார்தாரருக்கு எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய அம்மா இல்லத்தரசியாக இருந்தார் என்றும் அவருக்கு வருமானம் தரும் தொழில் எதுவும் அவர் செய்யவில்லை என்றால் சரிதான்.

5. புகார்தாரருக்கும் எனது அம்மாவிற்கும் இந்த பரிவர்த்தனைக்கு முன்பு எந்த பழக்க வழக்கமும் கிடையாது என்றால் சரிதான். என்னுடைய அம்மாவுக்கு எந்த வருமானமும் அறிமுகமும் இல்லாத காரணத்தினால் அவருக்கு தனிப்பட்ட முறையில் பணம் கொடுப்பதற்கு புகார்தாரருக்கு எந்த தேவையும் இல்லை என்றால சரிதான். என்னுடைய அம்மாதான் கடன் வாங்கினார் என்பதற்கு ஆதாரமாக எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான்.

6. ரூபாய் ஒரு லட்சம் கடன் வாங்கி அதற்குண்டான வட்டித்தொகை புகார்தாரருக்கு நாங்கள் கொடுத்தோம் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்றால் சரிதான். புகார்தாருக்கு கடைசியாக பணத்தை எந்த நாள் கொடுக்கப்பட்டது என்றால் 2017 ம் வருடம் ஜுலை மாதம் இருக்கும். புகார்தாரருக்கு பணத்தை திருப்பிக்கொடுத்த பிறகு அவரிடம் ஆதரவாக கொடுத்த கடனுறுதி சீட்டு மற்றும் வழக்கு காசோலையை நான் திரும்ப பெறவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை புகார்தாரர் திரும்ப கொடுக்கவேண்டும் என்பதற்கு அவர் மீது சட்ட ரீதியான எந்த நடவடிக்கையும் நான எடுக்கவில்லை என்றால் சரிதான்.

7. மேற்படி காசோலை வங்கியில் தாக்கல் செய்யப்பட்டார் அந்த பணத்தை பட்டுவாடா செய்யவேண்டாம் என்று வங்கிக்கு எந்த ஒரு விண்ணப்பமும் கொடுக்கப்பட வில்லை என்றால் சரிதான். காசோலை மோசடி வழக்கு சம்மந்தமாக என்னுடைய தந்தைக்கு புகார்தாரரின் வழக்கறிஞரிடம் இருந்து அறிவிப்பு வந்தது என்றால் சரிதான். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை எனது அப்பா கையொப்பமிட்டு பெற்றுக்கொண்டு பதில் அறிவிப்பு அனுப்பிய விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

8. மேற்படி பதில் அறிவிப்பில் புகார்தாரரிடம் என்னுடைய அம்மாதான் கடன் வாங்கினார் என்பது குறிப்பிடப்படவில்லை என்றால் வழக்கறிஞர் அறிவிப்புக்கு பதில் அனுப்பியது மட்டும்தான் தெரியும் அதில் அடங்கியுள்ள சங்கதிகள் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பதில் அறிவிப்பில் எதிரி தான்தான் புகார்தாரரிடம் இருந்து கடன் வாங்கியதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

9. என்னுடைய அம்மா புகார்தாரரிடம் இருந்து தனிப்பட்ட முறையில் எந்த கடனும் பெறவில்லை என்றும் எதிரியான என் தந்தைதான் புகார்தாரரிடம் இருந்து கடன் வாங்கினார் என்றும் அதற்கு ஆதாரமாக கடனுறுதி சீட்டு மற்றும் வழக்கு காசோலையை கொடுத்தார் என்றால் சரியல்ல. என்னுடைய அம்மாவிற்கு புற்று நோய் இருந்தது என்பதற்கும் சிகிக்சை பெற்றதற்கும் எந்த ஆவணமும் ஆதாரமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய தாயாரின் சிகிச்சைக்காக கடன் பெறவில்லை என்றும் என் தந்தையின் வியாபார விருத்திக்காக கடன் பெறப்பட்டது என்றும் அதனை கடனுறுதி சீட்டில் எழுதப்பட்டுள்ளது என்றால் அது பொய்.

10. கடனுறுதி சீட்டு புகார்தாரரிடம் வழங்கப்படும்போது நான் இருந்தேனா என்று குறிப்பிட்டுள்ளேன். அந்த ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பமிட்டுள்ளேனா என்றால் அவ்வாறு சாட்சி கையொப்பமிடவில்லை. கடந்த 03.06.2016 அன்று எனது வியாபார விருத்திக்காக என்னுடைய தநதை புகார்தாரரிடம் இருநது ரூபாய் 7 லட்சம் கடன் வாங்கினார் என்றும் அதற்கு ஆதாரமாக கடனுறுதி சீட்டு மற்றும் 30.03.2017 தேதியிட்ட வழக்கு காசோலை கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

11. எதிரியான என்னுடைய தந்தை காசோலை மோசடி செய்ததால் புகார்தாரர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் அந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக எதிரிக்கு அனுசரணையாக பொய்யான சங்கதிகளைக்கொண்டு நீதிமன்றத்தில் பொய் சாட்சிமயளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/J.Saravanakumar)
Judicial Magistrate No.I,
Pollachi.